மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12–ம் நாள் வெள்ளிக்கிழமை

அ.வ.எண். 23/18

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: ஞானேஸ்வரன் தேதி : 12.09.25
வயது : த/பெ : மலையாண்டி நாடார்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

**<u>12.09.25 குறுக்கு விசாரணை</u> (2, 20 முதல் 24 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு)**

1. தாவா சொத்து எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது. 2 ம் பிரதிவாதியின் தாத்தா பால்பாண்டி நாடாரின் சகோதரர் சின்னக்கனி நாடார்தான் எங்கள் தாத்தா என்றால் சரிதான். பால்பாண்டி நாடாருக்கு அன்ன லெட்சுமி என்ற ஒரு பெண் மகள் மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான். அவருக்கு ஆண் குழந்தை கிடையாது. அன்னலெட்சுமியின் வாரிசுகள் 1 முதல் 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான். என் தாத்தா சின்னக்கனி நாடாருக்கு என் அப்பா மலையாண்டி நாடார் மற்றும் என் சித்தப்பா ராஜபாண்டி நாடார் வாரிசுகள் ஆவர்.

2. சின்னக்கனி நாடாருக்கு 2 பெண் மக்கள். அவர்கள் புஷ்பம் அம்மாள், குருத்தம்மாள். அவர்கள் இருவரும் உயிருடன் இல்லை. குருத்தம்மாளுக்கு 2 பேரும், புஷ்பம் அம்மாளுக்கு 4 பேரும் வாரிசுகள். புஷ்பம் அம்மாள் மற்றும் குருத்தம்மாளின் வாரிசுகள் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் வழக்குரையில் சின்னக்கனி நாடாரின் பெண் மக்கள் பற்றி தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.11 19:22:27 +0530

எங்கள் குடும்ப சொத்துக்களை பொறுத்து சின்னக்கனி நாடார் மற்றும் பால்பாண்டி நாடாருக்கு சரிபாதி பாகம் உண்டு என்றால் சரிதான். எங்கள் குடும்ப சொத்துக்களை பொறுத்து 1982 ல் பால்பாண்டி நாடார், மலையாண்டி நாடார் மற்றும் ராஜபாண்டி நாடார் ஆகியோர் பதிவு பெற்ற பாகப்பிரிவினை ஆவணம் எழுதிக்கொண்டனர் என்றால் சரிதான். அதனை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் வழக்குரையில் சொல்லியுள்ளேன்.

3. மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தை தாக்கல் செய்யாததற்கு சிறப்பு காரணம் எதுவும் இல்லை. அந்த ஆவணத்தில் சர்வே எண் 54 /56 ல் 1 ஏக்கர் 6 செண்ட்டில் மேல்பக்கம் 34 செண்டில் மேல்பக்கம் 17 செண்ட் எங்கள் குடும்பத்துக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மேல்பக்கம் 34 செண்டில் கீழ்பக்கம் 17 செண்ட் பால்பாண்டி நாடாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எங்களுக்கு ஒதுக்கப்பட்ட 17 செண்டுக்கு 4 மால் எல்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பால்பாண்டி நாடாருக்கு ஒதுக்கப்பட்ட 17 செண்ட்டுக்கும் 4 மால் எல்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

4. 1982 ம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணப்படி சர்வே எண் 54/56 எங்கள் குடும்பத்திற்கு 34 செண்ட் மட்டும் தான் பாத்தியம் என்றால் 34 செண்ட் மற்றும் பிரிக்கப்படாத 10.70 செண்டும் பாத்தியம். நான் வழக்கிற்காக பிரிக்கப்படாமல் 10.70 செண்ட் உள்ளதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறும் 10.70 செண்ட் 1982 ஆம் ஆண்டு ஆவணத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு 34 செண்ட் மட்டும் தான் பாத்தியம் என்பதால் 10.70 செண்ட் 1982 ம் ஆண்டு ஆவணத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

5. எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட 34 செண்ட் சர்வே எண் 54/56 A ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பால்பாண்டி நாடாருக்கு ஒதுக்கப்பட்ட

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.11 19:22:33 +0530

17 செண்டில் கீழ்புறம்  யாருடைய சொத்து எல்கையாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சாமுவேல் நாடார் சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது. சாமுவேல் நாடாரிடம் இருந்து என் அப்பா மற்றும் சித்தப்பா கிரையம் எதுவும் வாங்கவில்லை. 2ம் பிரதிவாதி 20ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள அதிகார ஆவணத்தில் மேற்புறம் உள்ள 17 செண்ட் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

6. வழக்கு சொத்திற்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் எல்கை மால்கள் குறிப்பிட்டுள்ளேன் என்றால் பூமியில் உள்ள எல்கைமாலை குறிப்பிட்டுள்ளேன். நான் சொல்லியுள்ள எல்கை மால்  படி தாவா சொத்து பூமியில் இல்லை என்றால் சரியல்ல. 20 ம் பிரதிவாதி 21ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள கிரைய ஆவணத்தை படித்துப்பார்த்துள்ளேன்.  20ம் பிரதிவாதி 21 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள வா.சா.ஆ 6 கிரைய ஆவணத்தில் சர்வே எண் 54/56 ல் 1 ஏக்கர் 6 செண்டில் மேல்புறம் 34 செண்டில் கீழ்புறம் செண்டில் 17 ல் கீழ்பக்கம் செண்டில் 8 ல் மேற்கடைய செண்ட் 3 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. இதே போன்று குறிப்பிட்டுதான் 20 ம் பிரதிவாதி 22 ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ 7ல் 5 செண்ட் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பால்பாண்டி நாடாருக்கு ஒதுக்கப்பட்ட 17 செண்டில் எங்களுக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரிதான். 1982ம் ஆண்டு பாகப்பரிவினை ஆவணப்படி பால்பாண்டி நாடார் அவருக்கு பாத்தியப்பட்ட 17 செண்டை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். பால்பாண்டி நாடார் அவருக்கு பாத்தியப்பட்ட 17 செண்ட் மற்றும் வேறு சில சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதிக்கு 08.03.1997ல் பதிவு செய்யப்பட்ட ஒரு உயில் ஆவணம் பிறப்பித்து கொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.11 19:22:38 +0530

8. மேற்படி உயிலில் சான்றிட்ட நகலினை 2ம் பிரதிவாதி இடைநிலை மனுவின் எதிர் உரையுடன் தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பால்பாண்டி நாடார் 02.06.2002ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பால்பாண்டி நாடார் இறப்பு பின்பு மேற்படி உயில் அமலுக்கு வந்து அதில் கண்ட சொத்துக்களை 2ம் பிரதிவாதி அனுபவித்து வரும் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. உயிலின் அடிப்படையில் கூட்டு பட்டாவில் 2ம் பிரதிவாதி பெயர் உள்ளது என்றால் கூட்டுப்பட்டாவில் அவர் பெயர் உள்ளது ஆனால் உயிலின் அடிப்படையிலா என்று எனக்கு தெரியாது.

9. உயிலின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி 20ம் பிரதிவாதிக்கு 8 செண்டை பொறுத்து அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதிகார ஆவணம் உள்ளது என்று தெரியும் ஆனால் உயிலின் அடிப்படையிலா என்று தெரியாது. அதிகார ஆவணத்தின் அடிப்படையில் 20 ம் பிரதிவாதி 21ம் பிரதிவாதிக்கு 3 செண்டும் 22 ம் பிரதிவாதிக்கு 5 செண்டும் 10.01.2018 ல் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

10. சர்வே எண் 54/56 F ல் பால்பாண்டிநாடார் , மலையாண்டி நாடார் மற்றும் ராஜபாண்டி நாடார் பெயர் உள்ளதா என்றால் ஆம். ஆனால் அது பாதையாகும். அடங்கல் பதிவேட்டில் பாதை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 54/56 F 8 ½ செண்ட் இருக்கலாம் என்றால் எனக்கு சரியாக தெரியாது. அடங்கல் ஆவணத்தில் சர்வே எண் 54/56 F 8.49 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

11. நில உடைமை மேம்பாடு திட்டத்தில் சர்வே எண் 54/56 G மற்றும் சர்வே எண் 54/56 F ஆகியவற்றிற்கு மலையாண்டி நாடார், ராஜபாண்டி நாடார் பெயரில் தவறாக பதிவுகள் ஏற்பட்டுள்ளன என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் 3ல் 1பாகத்தில் 6ல் 1 பாகம் கேட்டுள்ளேன். என்னுடைய கட்சிப்படி என் சித்தப்பா

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.11 19:22:43 +0530

ராஜபாண்டி நாடாருக்கும் 3ல் 1பாகம் உண்டா என்றால் ஆம். நான் கூறும் பங்கு விகிதாச்சாரம் தவறு என்றால் சரியல்ல. என் தந்தை 1991ல் இறந்தார். என் தந்தையின் வாரிசு சான்றிதழ் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. வாரிசு சான்று வாங்கியுள்ளோமா என்றால் இல்லை. ஏன் வாங்கவில்லை என்றால் தேவை எழவில்லை.

12. என் தந்தைக்கு 2 மனைவி என்பதால் தான் வாரிசு சான்றிதழ் வாங்கவில்லை என்றால் சரியல்ல. என் தந்தைக்கு என் அம்மா மட்டும் தான் மனைவி. என் தந்தையின் 2 வது மனைவியின் வாரிசுகளை சேர்க்காததால் தாவா வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் 2 ம் மனைவி என்று யாரும் இல்லை. 2ம் பிரதிவாதி வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார் என்றால் திருச்சியில் இருப்பதாக தான் எனக்கு தெரியும். தற்போது 2ம் பிரதிவாதி கென்யாவில் உள்ளார் என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதிக்கு எதிராக எங்கள் குடும்பத்தில் ஒருவர் குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆம். 10 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார்.

13. என் சகோதர சகோதரிகள் மற்றும் என் அம்மா ஏன் என்னுடன் வழக்கு நடத்த வரவில்லை என்றால் என் பாகத்தை நான் கேட்பதால் நான் மட்டும் வழக்கு போட்டுள்ளேன். என் பாகத்தை கேட்டு என் சகோதர சகோதரிகள் மற்றும் ராஜபாண்டி நாடாருக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் ஆம். அதை தாக்கல் செய்யலாமா என்றால் என் வழக்கறிஞரிடம் கேட்கவேண்டும். நான் 2ம் பிரதிவாதியின் 17 செண்ட் சொத்தினை அபகரிப்பதற்காக பொய்யான வழக்கு மூலத்துடன் உரிமையில் மற்றும் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரிக்கப்படாத 10.70 செண்டுக்குதான் வழக்கு போட்டுள்ளேன்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.11 19:22:47 +0530

14. தாவா சொத்து என் குடும்பத்துக்கு பாத்தியப்பட்டது அல்ல என்பதால் நான் கேட்ட பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.09.11 19:22:52 +0530